திருநெல்வேலி, முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்.
பிறப்பிப்பவர் : திரு. கோ. முத்துச்சாமி, எம்.ஏ. எம்.எட்.,
மூ.மு.எண். 4511 /அ1 /2024, நாள் .07/2024

பொருள் : பள்ளிக்கல்வித்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் நியமனம் - பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு. ராஜநாயகம் சுந்தர்சிங், இடைநிலை ஆசிரியர் என்பவரின் வாரிசுதாரர் மனைவி திருமதி. எஸ். டெனிற்றா, இளநிலை உதவியாளர் , கூடன்குளம் அரசு மேல்நிலைப்பள்ளி என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. திருநெல்வேலி முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 3697/அ1/2023 நாள்31.07.2023
2. அரசாணை (நிலை) எண்.48/தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.26.02.2021.
3. அரசாணை (நிலை) எண்.33/தொழிலாளர்நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (Q1)த் துறை நாள்.08.03.2023
4. அரசு கடித எண். 1308/பக4 (1)/ 2023- 1 பள்ளிக்கல்வித்துறை, தலைமை செயலகம் நாள். 06.11.2023
5. சென்னை – 6 தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) ந.க.எண். 41477/ஜே/இ1/2022 நாள். 15.012.2023
6. அரசு கடித எண் (efile). 4419/தொ.க1(1)/ 2024 நாள். 17.05.2024
7. சென்னை – 6 தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) ந.க.எண். 026062//ஜே/இ2/2023 நாள். 22.05.2024
8. கூடன்குளம் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியரின் கடிதம் ந.க.எண்08 நாள்.09.01.2024

---

மதுரை மாவட்டம், முத்தம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 21.08.2015 அன்று காலமான திரு. ராஜநாயகம் சுந்தர்சிங் என்பவரின் வாரிசுதாரர் மனைவி திருமதி. எஸ். டெனிற்றா என்பவருக்கு பார்வை-1இல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக திருநெல்வேலி மாவட்டம் , கூடன்குளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக 01.08.2023 முற்பகல் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. அன்னாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள்முதல் பணிவரன்முறை செய்யக் கோரி பார்வை 8ன்படி கருத்துரு பெறப்பட்டுள்ளது.

பார்வை-2இல் காணும் அரசாணையில் பத்தி 5.1 மற்றும் 5.2ல் கீழ்க்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணிநியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது.

(5.2) மேலே பத்தி 5.1இல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள்

(One Level Higher than the Appointing Authority), அவரவர் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசுப்பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என தெரிவித்து ஆணையிடப்பட்டிருந்தது.

பார்வை பார்வை 4ல் காணும் 06.11.2023 நாளிட்ட அரசுக்கடிதத்தில்

" கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தனியர்களின் பணியினை வரன்முறை செய்திட " தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினை இசைவு பெற தேவையில்லை" என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் " இனி வருங்காலங்களில் கருணை அடிப்படையில் பணி நியமனங்களில் விதித் தளர்வு இல்லாத நேர்வுகளில் இளநிலை உதவியாளர் பதவியில் உரிய அலுவலர் நிலையில் பணிவரன்முறை செய்த பின் அரசளவில் பதிவு செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை எனத் தெரிவித்து ஆணையிடப்பட்டுள்ளது.

பார்வை 6ல் காணும் அரசுக் கடிதத்தில்

" சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (Appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திடுமா.று தெரிவிக்கப்பட்டுள்ளது".

எனவே, தனியருக்கு எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை 6ல் காணும் அரசுக் கடிதத்தின்படியும் பார்வை 8ல் காணும் கடிதத்தின் மூலம் பெறப்பட்ட அலுவலரின் பரிந்துரையின் பேரில் கூடன்குளம் அரசு மேல்நிலைப்பள்ளி இளநிலை உதவியாளர் திருமதி.எஸ். டெனிற்றா என்பாருக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்ற நாளான 01.08.2023 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தப்படுகிறது.

மேற்படிபணியாளர் திருமதி. எஸ். டெனிற்றா பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர்பணியில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார். தகுதிகாண் பருவகாலத்தில் மேற்படி தனியர் தமிழ்நாடு அமைச்சுப் பணிவிதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

இணைப்பு-

அசல் பணிப் பதிவேடு

முதன்மைக்கல்வி அலுவலர்
திருநெல்வேலி

பெறுநர் :

திருமதி. எஸ். டெனிற்றா, இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப்பள்ளி, கூடங்குளம். )(உரியவழியாக)

நகல் :

1.சென்னை, பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

2.தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி,கூடன்குளம்.